நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 74/2020

அரசு தரப்புக்காக அ. சா.1 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 1 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on

12th day of November 2025.

*(ஏற்கனவே 12.06.2025 தேதியில் முதல் விசாரணை முடிக்கப்பட்ட சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார். சாட்சியிடம் முதல் விசாரணை வாக்குமூலம் படித்து பார்க்க கொடுக்கப்பட்டது. சாட்சி முழுவதுமாக படித்து பார்த்தார்.)*

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.14)

என்னுடைய பூர்வீகம் என்ன என்று கேட்டால் சுபஉப்பலவாடி கிராமம். எனது மகள் சபீனாவிற்கு திருமணம் நடந்ததற்கு முன்பிருந்தே அவர் இறக்கும் வரை நாங்கள் கடலூர் ஓ.டி சங்கர நாயுடு தெருவில் உள்ள தண்டபானி என்பவர் வீட்டில் குடியிருந்தோம் என்றால் சரிதான். தற்போது எங்கு குடியிருக்கிறோம் என்றால் செல்லங்குப்பத்தில் குடியிருக்கிறோம். நானும் எனது மகன் நிஷாந்தும் சிங்கப்பூரில் எத்தனை வருடங்களாக

வேலை செய்து வருகிறோம் என்றால் நான் 21 வருடங்களாகவும் எனது மகன் 4 வருடங்களாகவும் வேலை செய்து வருகிறோம். எனது மகள் இறப்பதற்கு முன்பே சிங்கப்பூரில் வேலை செய்தேன் என்றால் சரிதான். எனது மகளுக்கும் 1–ம் எதிரிக்கும் 23.01.2019–ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான். அந்த திருமணத்திற்கு நானும் எனது மகனும் திருமணத்திற்கு 5 நாட்கள் முன்பு வந்தோம். திருமணம் முடிந்து எத்தனை நாட்களுக்கு பிறகு நான் சிங்கப்பூர் போனேன் என்றால் ஒரு வாரத்திற்கு பிறகு போனேன். எனது மகன் திருமணம் முடிந்து ஒரு மாதத்திற்கு பிறகு சிங்கப்பூர் சென்றான். அதன்பிறகு இந்தியாவிற்கு எப்போது வந்தோம் என்றால் எனது மகள் மருத்துவமனையில் இருக்கும்போது 03.10.2019 தேதியில் நானும் 06.10.2019 தேதியில் எனது மகனும் வந்தோம். நாங்கள் சிங்கப்பூருக்கு சென்றுவிட்டதால் இங்கு நடந்தது நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போன் மூலமாக தெரியும். நான் யார் சொல்லி சிங்கப்பூரில் இருந்து வந்தேன் என்றால் எனது மனைவி சொல்லி வந்தேன். 03 ஆம் தேதி நான் வந்த பிறகு எனது மகள் இறக்கும் வரை சென்னை மருத்துவமனையில் இருந்தேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருக்கும்போது முதுநகர் காவல்நிலைய போலிசாரோ சென்னை போலிசாரோ மருத்துவமனைக்கு வரவில்லை என்றால் சரிதான். நான் வருவதற்கு முன்பே 02 ஆம் தேதி கடலூர் டி,எஸ்.பி என் மகளிடம் வாக்குமூலம் வாங்கியதாக என் மனைவி சொன்னார். போலிசில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் கொடுத்தேன். யார் அந்த புகாரை எழுதினார்கள் என்றால் 06 ஆம் தேதி ஓ.டி போலிசில் கொடுத்த புகாரை சப் கலெக்டர் எழுதியதில் நான் கையெழுத்து போட்டேன். புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். நான் எழுதவில்லை. நான் சொல்ல சொல்ல அவர் எழுதினார். எழுதியவர் பெயர் என்ன என்று கேட்டால் தெரியவில்லை. பொதுவாக திருமணத்தின்போது நகையை போடுவது, கட்டில், பீரோ வாங்கிக் கொடுப்பது என்பது பெண்ணுக்கு சீராக செய்வது என்று சொன்னால் சரிதான். அதேபோல தான் நான் எனது மகளுக்கு சீர் செய்தேன் என்றால் சரிதான். எனது மகள் என்ன படித்துள்ளார் என்று கேட்டால் முள்ளோடையில் உள்ள கணேஷ் இன்ஜினியரிங் காலேஜில் பி.டெக் முடித்தார். எனது மகள் தைரியமான பெண் தானா என்று கேட்டால்

அவ்வளவு தைரியம் இல்லை என்று நான் சொல்கிறேன். நல்லது, கெட்டது என் மகளுக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு சிங்காரத்தோப்பில் அமரன் மகன் வெற்றி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. அவர் கடலூர் செயின்ட் ஜோசப் கல்லூரியில் ஐ.டி படித்தார் என்றும் படிக்கும்போது அவருக்கும் எனது மகளுக்கும் பழக்கம் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 2 போட்டோக்களில் உள்ள நபர் எனது மகளா என்றால் ஆமாம். (அந்த இரண்டு புகைப்படங்களும் **எ.த.சா.ஆ.1** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது). *(அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த புகைப்படம் குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை தெரிவித்தார். எங்கிருந்து கிடைத்தது என்பதற்கான தகவல் இல்லை என ஆட்சேபணை தெரிவித்தார். சாட்சி இந்த புகைப்படத்தில் உள்ள நபர் தன்னுடைய மகள் என்று ஏற்றுக்கொண்ட நிலையில் எந்த புகைப்படத்தை காண்பித்து எந்த கேள்வி கேட்கப்பட்டது என்பது தெரிவதற்காக அந்த புகைப்படங்கள் குறியீடு செய்வதற்கு அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபணை நிராகரிக்கப்படுகிறது).* படிக்கும் காலத்தில் இருந்தே எனது மகளும் அமரன் என்பவரும் பழகி வந்தார்கள் என்றும் எனது மகளும் அமரன் என்பவரை திருமணம் செய்துகொள்ள விரும்பினார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது மகளின் விருப்பத்திற்கு எதிராக எனது மகளுக்கு பிடிக்காத 1–ம் எதிரிக்கு எனது மகளை நாங்கள் திருமணம் செய்துகொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் எனது மகள் 1வது எதிரியுடன் சேர்ந்து வாழ விரும்பாமல் அடிக்கடி எனது வீட்டிற்கு வந்துவிடும் என்று சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு எவ்வளவு நாள் எனது மகள் 1–ம் எதிரியுடன் வாழ்ந்தார் என்று கேட்டார் ஒரு வாரம். அவ்வாறு வாழ்ந்த காலத்தில் எனது மகள் விருப்பப்படாததால் எனது மகளுக்கும் 1வது எதிரிக்கும் எவ்வித தாம்பத்திய உறவும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகளால் தான் 1–ம் எதிரியுடன் வாழ பிடிக்காமல் எனது வீட்டிற்கு வந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் 1வது எதிரி பலமுறை அழைத்தும் எனது மகள் வாழ விரும்பாததால் 1–ம் எதிரி 08.05.2019 தேதியில் கடலூர், குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னால் அவர்களாகத்தான் தாக்கல் செய்தார்கள் என்று நான் சொல்கிறேன். அந்த வழக்கில் எனது மகள் நீதிமன்றத்தில் ஆஜரானார் என்று சொன்னால்

சரியல்ல. திருமணமாகி ஒரு வருடத்திற்குள் அந்த விவாகரத்து வழக்கை தாக்கல் செய்ததால் இடைக்கால மனு எண்.282/2019 விசாரணைக்கு வந்தபோது எனது மகள் வழக்கறிஞருடன் ஆஜரானார் என்று சொன்னால் சரியல்ல. அந்த மனுவிற்கும் எனது மகள் எவ்வித ஆட்சேபணையும் கடைசி வரை தெரிவிக்கவில்லை என்று சொன்னால் தெரியாது. புகாரிலும் போலிசார் என்னை விசாரித்தபோதும் "ஒரு மாதத்திற்கு முன்பாகவே கையில் காயங்களுடன் என் மகள் புகைப்படம் அனுப்பியதாகவும் எப்படி ஆனது என்று கேட்டதற்கு விழுந்து விட்டதாகவும் கூறினார்" என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் உடனே எனது மனைவியை என் மகளை சென்று பார்க்கும்மாறு கூறினேன் என்றும் எனது மனைவி மகளின் வீட்டிற்கு சென்று மகளை அழைத்து எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேலும் எங்கள் உறவினர்கள் இந்த பிரச்சனை சம்மந்தமாக 1வது எதிரியிடம் கேட்போது எதிரியும் உங்கள் பெண்ணை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னாதாக உறவினர்கள் என்னிடம் சொன்னார்கள் என்ற விவரத்தை போலிஸ் விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தபோதும் புகாரிலும் "எதிரிகள் மூவரின் காலில் எனது மகள் விழுந்தபோது 2–ம் எதிரி எட்டி உதைத்து என் வீட்டிற்கு வர தகுதி இல்லை என்று சொன்னதாக எனது மனைவி என்னிடம் சொன்னார்" என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் 03ம் தேதி ஆஸ்பத்திரியில் எனது மகளை விசாரித்ததாக சொல்லவில்லை என்றால் நான் சொல்லவில்லை. எனக்கு குப்புராஜ் என்ற அண்ணன் பாண்டிச்சேரியில் உள்ளார் என்றால் சரிதான். அவர் முன்னிலையில் திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. அவர் திருமணத்திற்கு வந்திருந்தார். அவரிடம் நான் எந்த பிரச்சனையும் பேசவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னது போல சம்பவங்கள் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எந்த சீர் வரிசையும் எங்களிடம் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகளின் இறப்பிற்கு எதிரிகள் எவ்வித தூண்டுதலும் செய்யவில்லை என்றும் எதிரிகள் காரணம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது மகள் தான் காதலித்த நபரை திருமணம்

செய்யவில்லை என்ற மனவருத்தம் நீண்ட நாட்களாக இருந்தது என்றும் அந்த மனவருத்தத்தின் காரணமாக தான் 1–ம் எதிரியுடன் வாழ விரும்பாமல் விஷம் அருந்தி இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது மகள் இறந்த மனவருத்தத்தில் நான் எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.51)

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.